RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s222719

OPEN ACCESS

# இன்றைய பெண் படைப்பாளர்களின் இலக்கியப் பார்வை

ர. கௌரி [அ, *], செ. கனிமொழி [அ]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத் துறை, செல்லம்மாள் மகளர் கல்லூரி, கிண்டி, சென்னை - 600032, தமிழ்நாடு, இந்தியா

# Literary View of Today's Female authors

R. Gowri [a, *], S. Kanimozhi [a]

[a] PG Tamil & Research Department, Chellammal Womens College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: gowrigayathri15@gmail.com

Received: 25-09-2022
Revised: 06-11-2022
Accepted: 09-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

In ancient times, our society gave importance to women and it was women who led the society. Bharatiyar and Thanthai Periyar are notable among those who have highlighted the position of women in Tamil literature from a different perspective. This article examines how the writer reflects his society and environment in his works. This article examines about the doubts that raise among the writers, about the injustices to women in literary work of male writers, beautify imagination and parables through new poetry to express and understad feminist revolutionary ideas in the literary works of some female authors.

**Keywords:** Tamil literature, Female Poet, Literary Work, Writers

## முன்னுரை

பழந்தமிழர் காலத்தில் நம் சமூகம் பெண் வழிச் சமூகமாக தான் காணப்பட்டது. தமிழ் இலக்கியங்களில் பெண்ணின் நிலையை மாறுபட்ட கண்ணோட்டத்தில் எடுத்துக் கூறியவர்களுள் பாரதியாரும், தந்தை பெரியாரும் குறிப்பிடத்தக்கவர்கள். பெண் விடுதலைக் குறித்து மகாகவி பாரதியார் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தங்களுடைய கவிதையில்,

“அச்சமும் நாணமும் நாய்களுக்கு வேண்டுமாம்”

என்று சாடுவதோடு நில்லாமல்

“மாதர் தம்மை இழிவு செய்யும்

மடமையைக் கொளுத்துவோம்

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்

பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்”

பெண்ணுரிமை குறித்து கூறியுள்ளார் (Bharathiar, 2018). ஆனால் அதற்கு முன்பே பெண்கள் கல்வியறிவில் சிறந்து விளங்கினார்கள் என்பதற்குச் சங்ககாலப் பெண்பாற் புலவர்களான ஔவையார், ஆதிமந்தியார், நச்செள்ளையார் போன்றோர் பெண்ணுரிமை, கையறுநிலை போன்றவற்றை பாடுபொருளாகக் கொண்டு பாடியுள்ளார், இருப்பினும் அவர்கள் ஆணாதிக்க சமூகத்தில் தான்

வாழ்ந்துள்ளனர் என்பதற்குச் சான்றாக மரபு ரீதியான பெண்ணடிமைக் கருத்துக்களை தொல்காப்பியரின் நூற்பாக்கள் வழி நின்று அறிய முடிகிறது.

"பெருமையும் உரமும் ஆடுஉ மேன"

என்ற நூற்பாவின் அடிப்படையில் ஆண்மகன் உரனுடையவனாகப் பெருமைக்குரியவனாக உருவகப் படுத்தப்படுகிறான் (Ilampuranar, 2015).

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்

நித்தமும் பெண்பாற் குரிய"

என்று பெண்ணுக்குரிய பண்புகளாகவும் சொல்லப்பட்டுள்ளது (Ilampuranar, 2015). தமிழிலக்கியம் முழுவதும் ஆணாதிக்க பார்வை அழுத்தமாக காணப்பட்டாலும், 20-ஆம் நூற்றாண்டு தொடங்கி இன்றுவரை பல ஆண்கள் பெண்களுக்கு பெண்ணுரிமை, சமஉரிமை வழங்க வேண்டும் என பெண்களுக்காக குரல் கொடுக்கிறார்கள். இலக்கியங்களில் பெண்ணடிமை நிலையும், சில சூழல்களில் பெண்ணுரிமை நிலையும் காணமுடிகிறது. காப்பியங்களிலும் பெண்ணியம் குறித்து மணிமேகலை வாயிலாகப் பேசப்பட்டது அறியமுடிகிறது, இருப்பினும் இலக்கியங்களிலும், காப்பியங்களிலும் சில சூழ்நிலைகளில் பெண்களுக்கு நேர்ந்த அவலங்களை பெண் கவிஞர்களின் கவிதையின் வாயிலாக இக்கட்டுரையில் காண்போம்.

## சங்க இலக்கியத்தில் பெண்களின் நிலை

பெண்கள் என்றாலே மென்னையானவள் என்று பெண்மைக்கு மென்மை பூசி, பெண்களை இரணமாக்கி சங்க இலக்கியங்களில் பெண்களை பேசும் விதமே தனிதான். ஐந்திணைகளாய் சங்க இலக்கியங்கள் பிரிக்கப்பட்டது. அதில் ஐந்திணைகளை அகம், புறம் எனப் பிரித்து அகத்திலே முப்பொருளைக் கண்டனர், அதில் முதற்பொருளைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பிரித்து முதற் நானிலத்துக்கு ஆண்மக்களே தெய்வங்களாய் உருப்பெற்றனர். குறிஞ்சியும், முல்லையும் திரிந்து, நீர் இழந்து, வளமிழந்து, நிறமிழந்து, பசுமையின்றி காணப்படும் பாலை நிலத்திற்கு தெய்வமாய் பெண்ணாகிய கொற்றவை காட்டப்பட்டுள்ளது. இதனை கவிஞர். ஜெ. செல்லக்குமாரி அவர்கள் தங்களுடைய கவிதையில் அழகாக கூறியுள்ளார்.

"பாலைக்கோர் தெய்வமாய்

கொற்றவையை ஆக்கினர்

பிணந்தின்னும் பெண்ணாய்

உருவகப்படுத்தினர், அந்தோ!

வளமார்ந்த இடத்திற்குச்

சொந்தமானவர்கள்

ஆண்தெய்வங்கள்.

வளமிழந்த இடத்திற்குச்

சொந்தமானவர்கள்

பெண்தெய்வம்

என்ன பாகுபாடு இது?"

முதற்பொருளைத் தொடர்ந்து அடுத்து உரிப்பொருள் உள்ளே வந்தால் பெண்ணின் துயரங்களை திணைகளின் ஒழுக்கங்களாக காட்டப்பட்டுள்ளது (Selvakumari, 2005). பிரிதல், இருத்தல், இரங்கல் என நிமித்தங்களை பெண்கள் மட்டுமே சுமக்க வேண்டுமா? ஏன் ஆண்களுக்கு அப்பிரிவின் துயரம்

இருக்காதா அவர்கள் அந்நிமித்தங்களை சுமக்க கூடாதா? ஏன கவிஞர் ஜெ. செல்வக்குமாரி எடுத்துக் கூறியுள்ளார் பெண்களின் துயரத்தை,

“பிரிந்த காதலனை எண்ணி

பிரிவாற்றா துயருற்றாள் பெண்

அது பிரிதல் - பிரிதல் நிமித்தமானது.

பொருள் தேடச் சென்றவனுக்காக

கண்விழித்துக் காத்து நின்றாள்

அது இரங்கல் - இரங்கல் நிமித்தமானது.

இப்படி எத்தனை எத்தனை நிமித்தங்களை

பெண்மகள் சுமந்தாளே?.”

சங்க இலக்கியங்களில் பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்களும் உள்ளன (Selvakumari, 2005). எதிலும் ஆண்களை பேயாகவோ அல்லது துயரநிலையில் தலைவியைப் பிரிந்து பசலை நோயால் வாடுவதாக கூறுவதில்லையே. ஆண்மகனின் வீரம், கொடை போன்ற பெருமைகளைத்தான் பாடுகிறார்கள். ஆனால் ஆண்கள் வார்த்த இலக்கியங்களில் ஆணாதிக்க வெளிப்பாடுகளே காணப்படுகின்றன.

## காப்பியங்களில் பெண்களின் நிலை

“இலக்கியப் பெண்கள் மட்டும்

உயிர்பெற்று வாழ்ந்திருந்தால்

காவியமும், காப்பியமும்

இலக்கியமும், இதிகாசமும்

கதை மாறி போயிருக்கும்”

என்ற கவிதையின் வாயிலாக பெண்கள் மட்டும் மென்மையானவளாக காணப்படாமல் பிணந்தின்னும் கொற்றவையைப் போல கொதித்தெழுந்திருந்தால் காப்பியமும், காவியமும், இலக்கியமும் உருப்பெற்றிருக்காது, என்பதனை கவிஞர் ஜெ. செல்வகுமாரி ஊடகமாக கூறுகிறார் (Selvakumari, 2005).

கம்பராமாயணத்தில் இராமன், சீதை இருவரும் பிரந்து துயரப்பட்டனர். பிரிந்த இருவரும் சேரும் பொழுது சீதைக்கு மட்டும் ஏன் தீக்குளிப்பு? இராமனுக்கு ஏன் அப்பரிட்ச்சை இல்லை? ஏன் ஆணுக்கு கற்பு இல்லை, பெண்ணுக்கு மட்டும் தான் கற்பு உள்ளதா? இல்லை, இராமன் தீக்குளித்திருந்தால் உயிரோடு வந்திருக்கமாட்டானோ! என்பதன் மூலம் மிக அழகாக தங்களுடைய கவிதையில் கவிஞர் கற்பு என்பது இருபாலருக்கும் பொது என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

“இராமன் சீதையைத் தேடினான்

சீதை இராமனின்றி வாடினாள்

பிரிந்த இருவரும் துயரப்பட்டனர்,

அறிந்த பொழுது

அவதியுற்றனர்.

பிரிந்த இருவரும்

சேரும் பொழுது

சீதைக்கு மட்டும் ஏன் தீக்குளிப்பு?

ஒருவேளை-

இராமன் தீக்குளித்திருந்தால்

உயிரோடு வந்திருக்க மாட்டானோ?" (Selvakumari, 2005)

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் அழகிலும், பண்பிலும் சிறந்தவளான கண்ணகியை விட்டுவிட்டு மாதவியோடு போனது பிழை, கேடு கெட்ட கணவனுக்காக மதுரையை எரித்தது கண்ணகியின் பிழை, தீர விசாரிக்காமல் வாய்த் தவறி அரசியல் பிழை செய்தது பாண்டிய மன்னன் இவர்கள் அனைவரும் செய்த வினைப் பயனால் தண்டனை பெற்றார்கள் எனில் இதில் எந்தப் பிழையும் செய்யாத பாண்டிய மன்னனின் மனைவி கோப்பெருந்தேவி எந்தப் பிழையும் செய்யாமல் தண்டனை அனுபவித்தது எதற்காக? பாண்டியனைக் கணவனாக அடைந்ததா? இல்லை பெண் கணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏற வேண்டும் என்பதற்காக...... என்னும் கருத்தை கவிஞர் ஜெ. செல்வக்குமாரி தன்னுடைய கவிதையில் எடுத்துக்காட்டுகிறார்,

"கண்ணகியை விட்டு

மோகங் கொண்ட கோவலன்

மாதவியோடு போனது பிழை,

கணிகை குல மாதவியோ

அவனுக்காக வாழந்து

மணிமேகலையைப்

பெற்றது பிழை.

கற்புக்குல கண்ணகியோ

கேடு கெட்ட கணவனுக்காக

மதுரையை எரித்தது பிழை

பாண்டிய மன்னனோ

வாய்த்தவறி

அரசியல் பிழை செய்தது பிழை

பிழை செய்தார்கள்

தண்டனை அனுபவித்தார்கள்,

சரி-

பாண்டிய மன்னனின் மனைவி

கோப்பெருந்தேவி

செய்த பிழைதான் என்ன?

பாண்டியனைக்

கணவனாக அடைந்ததுதான்

அவள் செய்த பிழையா?" (Thamarai, 2012)

## கற்பு

"கற்பில் சிறந்தவள்
கண்ணகியா? மாதவியா?
நூற்றாண்டுகள் ஓடியும்
மக்களுக்கு சந்தேகம்
தீரவில்லை
கணவன் உயிர்போனாலும்
மதுரையை எரித்து
கற்பை நீருபித்தார் கண்ணகி
கற்பு இல்லையேல்
பற்றி எரியுமா
மதுரை மாநகரம்?
ஆணித்தரமாய்க் கேட்டது
கண்ணகி கட்சி
குலத்தொழிலுக்கு நடுவே
கற்பிழக்க வாய்ப்பு அதிகம்
அத்தனைக்கும் இடையே
அசராமல் காத்த
மாதவியே சிறந்தவள் என்று
மாதவி கட்சி
சந்தேகம் இல்லை
இருவருமே கற்பில்
சிறந்தவர்கள் தாம்.
கற்பிழந்தவன் கோவலனே!" (Thamarai, 2012)

என்பதை விவாத வடிவில் கவிஞர் தாமரை தங்களின் கவிதையின் மூலம் கற்பு என்பது ஆண்களுக்கும் உண்டு, காப்பியத்தில் கோவலன் என்றால் வணிகனின் மகன், அழகும் பண்பும் உடையவன் என்றும் பாண்டிய மன்னனின் தவறான தீர்ப்பால் உயிர் இழந்தவன் என்று பேசப்படுகிறானே தவிர அவனுடைய ஒழுக்கக் குறைவான செயலையும், இரு பெண்களின் வாழ்க்கையை சீரழித்ததை குறித்து யாரும் ஏன் விவாதம் செய்வதில்லை. பெண்களுக்கு மட்டுமே கற்பு உள்ளதா? ஆண்களுக்கு அது இல்லையா என்ன? இராமயணத்தில் பிரிந்த இருவரில் சீதைக்கு மட்டும் ஏன் தீக்குளிப்பு இராமனுக்கு ஏன் இல்லை! மனைவியை சந்தேகித்து தீக்குளிக்க சொன்ன இராமனை இறைவனாய் வழிப்படுகிறோம், தீக்குளித்த சீதையையும், மதுரையை எரித்த கண்ணகியையும் ஏன் வீட்டில் வைத்து யாரும் வழிப்படுவதில்லை,

"ஆம்...
கண்ணகி விழித்திருந்தால்
கோவலனை சுட்டிருப்பாள்!

 DOI: 10.34256/irjt224s222719

மாதவி மயங்காதிருந்தால்

மணிமேகலையை மாய்த்திருப்பாள்.

குந்தியவள் நினைத்திருந்தால்

கர்ணனையே கலைத்திருப்பாள்.

சீதையவள் கொதித்தெழுந்திருந்தால்

இராமனையே எரித்திருப்பாள்.

சந்திரமதி வெகுண்டிருந்தால்

அரிச்சந்திரனைப் புதைத்திருப்பாள்

ஆண் வார்த்த காப்பியங்கள்

பெண்ணுக்கிழைத்த கொடுமைகளே." (Selvakumari, 2005)

என்பதை கவிஞர் ஜெ. செல்வகுமாரி தங்களின் கவிதையின் மூலம் வெளிப்படுத்துகிறார். ஆண்கள் படைத்த காப்பியங்களில் கூட தங்களின் ஆணாதிக்க வெளிப்பாடே காணப்படுகிறது.

## முடிவுரை

இக்கட்டுரையின் மூலம் பெண் படைப்பாளர்கள் தங்களின் மன ஆதங்கத்தையும், சங்க காலம் தொட்டு இக்காலம் வரை பெண்கள் என்றாலே மென்மையானவர்கள் என்று கூறி அவர்களுக்கு நடந்த துயரங்களையும், அவலங்களையும் கவிதை உருவில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

## References

Bharathiar, (2018) Bharathiar Kavithaigal, Poompukar Pathippagam, Chennai, India

Ilampuranar, (2015) Tholkappiyam, Gowra Pathippagam, Chennai, India

Selvakumari, J. (2005) Penniyam Peasukirean, New Century Book House, Chennai, India

Thamarai, (2012) Oru Kathavum Konjam Kallipalum, Kumaran Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License